# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 160/60 — 1975 අප්‍රේල් 21 වැනි සඳුදා — 1975.04.21

160/60 ம் இலக்கம் — 1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 21 ந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

வேண்டுதற் கட்டளை இலக்கம் 158

கூட்டுறவுச் சங்கங்களின் (விசேட ஏற்பாடுகள்) 1970 ஆம் ஆண்டு 35 வது இலக்க அதிகாரச்சட்டம்

10 ம் பிரிவிற்குட்பட்ட கட்டளை

*1970 ஆம் ஆண்டு 35 வது இலக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் (விசேட ஏற்பாடுகள்) கட்டளைச் சட்டத்தின் 10 (1) ம் பிரிவின்படி எனக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின்பேரில் வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக மந்திரியான திக்கிரி பண்டார இலங்கரத்ன ஆகிய நான் இக்கட்டளையில் உள்ள பட்டோலையில் குறிக்கப்பட்ட சொத்தை மட்டுப்படுத்தப்பட்ட ரூவான்வெல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் (பதிவெண் கூ/384) வியாபார தேவைகளுக்காக வேண்டி 7 ஆந் தினம் மே மாதம் 1975 ஆம் ஆண்டு தொட்டு இத்தால் வேண்டுதற் கட்டளை இடுகிறேன்.*

ரீ. பி. இலங்கரத்ன,
வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக மந்திரி.

கொழும்பு,
16.04.1975.

பட்டோலை

கேகாலை மாவட்டத்திலுள்ள தெஹியோவிட்ட காரியாதிகாரிப் பிரிவிலே, தல்துவவசம 118 கிராமசேவையாளரின் பகுதியிலே அமைந்துள்ளதும், அவிசாவெல தல்துவவைச் சேர்ந்த எம். எஸ். எம். சாபி, எம். எஸ். எம். கனீஜா, எம். எஸ். எம். பாத்தும்மா என்போருக்கும் உரியதான மதிப்பீட்டிலக்கம் 964 ஐ கொண்ட கட்டடமும் கட்டடமமைந்துள்ள 20 பேர்ச்சஸ் அளவுள்ள கொடவத்தை என்றழைக்கப்படும் காணியும். இதன் எல்லைகளாவன :—

வடக்கில் :—மதிப்பீட்டிலக்கம் 962 ஐ கொண்ட கட்டடம்.

கிழக்கில் :—அவிசாவெல-கினிகத்தேன வீதி.

தெற்கில் :—கொடவத்தை என்றழைக்கப்படும் காணியின் எஞ்சிய பாகம்.

மேற்கில் :—கொடவத்தை எனப்படும் காணி.

4-546

---

வேண்டுதற் கட்டளை இலக்கம் 159

கூட்டுறவுச் சங்கங்களின் (விசேட ஏற்பாடுகள்) 1970 ஆம் ஆண்டு 35 வது இலக்க அதிகாரச்சட்டம்

10 ம் பிரிவிற்குட்பட்ட கட்டளை

*1970 ஆம் ஆண்டு 35 வது இலக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் (விசேட ஏற்பாடுகள்) கட்டளைச் சட்டத்தின் 10 (1) ம் பிரிவின்படி எனக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின்பேரில் வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக மந்திரியான திக்கிரி பண்டார இலங்கரத்ன ஆகிய நான் இக்கட்டளையில் உள்ள பட்டோலையில் குறிக்கப்பட்ட*

சொத்தை மட்டுப்படுத்தப்பட்ட ரூவான்வெல பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் (பதிவெண் கொ/384) வியாபார தேவைகளுக்காக வேண்டி 7 ஆந் தினம் மே மாதம் 1975 ஆம் ஆண்டு தொட்டு இத்தால் வேண்டுதற் கட்டளை இடுகிறேன்.

ரீ. பி. இலங்கரத்ன,
வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக மந்திரி.

கொழும்பு,
16.04.1975.

பட்டோலை

கேகாலை மாவட்டத்திலுள்ள தெஹியோவிட்ட காரியாதிகாரிப் பிரிவிலே, கருகொட 115 'ஏ' கிராம சேவையாளரின் பகுதியிலே அமைந்துள்ளதும் பொறலண்கடவைச் சேர்ந்த எம். ஏமிஸ் என்றழைக்கப்படுபவருக்கு உரியதும், மெதவத்தை அல்லது பஹல கெதரவத்தை என்றழைக்கப்படும் 20 பேர்ச்சஸ் அளவுள்ள காணியும் அதிலமைந்துள்ள கட்டடங்கள் மூன்றும். இதன் எல்லைகளாவன :—

வடக்கில் :—ஹம்பகஹபிட்டியவத்தை அல்லது பபன்சியாகேவத்தையும் மெதவத்தை அல்லது பஹல கெதரவத்தை காணியின் எஞ்சிய பாகம்.

கிழக்கில் :—பிரதான வீதி.

தெற்கில் :—பிரதான வீதியும் மெதவத்தை அல்லது பஹல கெதரவத்தை காணியின் எஞ்சிய பாகம்.

மேற்கில் :—மெதவத்தை அல்லது பஹல கெதறவத்தை காணியின் எஞ்சிய பாகம்.

4-545

---

வேண்டுதற் கட்டளை இலக்கம் 160

கூட்டுறவுச் சங்கங்களின் (விசேட ஏற்பாடுகள்) 1970 ஆம் ஆண்டு 35 வது இலக்க அதிகாரச்சட்டம் 10 ம் பிரிவிற்குட்பட்ட கட்டளை

1970 ஆம் ஆண்டு 35 வது இலக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் (விசேட ஏற்பாடுகள்) கட்டளைச் சட்டத்தின் 10 (1) ம் பிரிவின்படி எனக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின்பேரில் வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக மந்திரியான திக்கிரி பண்டார இலங்கரத்ன ஆகிய நான் இக்கட்டளையில் உள்ள பட்டோலையில் குறிக்கப்பட்ட சொத்தை மட்டுப்படுத்தப்பட்ட பத்தரமுல்ல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் (பதிவெண் கொ/2443) வியாபார தேவைகளுக்காக வேண்டி 7 ஆந் தினம் மே மாதம் 1975 ஆம் ஆண்டு தொட்டு இத்தால் வேண்டுதற் கட்டளை இடுகிறேன்.

ரீ. பி. இலங்கரத்ன,
வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக மந்திரி.

கொழும்பு,
16.04.1975.

பட்டோலை

கொழும்பு மாவட்டத்திலுள்ள ஹேவாகம் கோறளை (மேற்கு) காரியாதிகாரியின் பிரிவிலே தலங்கம வடக்கு கிராமசேவையாளரின் பகுதியிலே கொஸ்வத்தையிலுள்ள லங்கா நிரப்பு நிலையத்துக்கு அடுத்தாற்போல் அமைந்துள்ளதும் ஹோகந்தர, டபிள்யூ. ஏ. பெரேரா அவர்களுக்கு உரியதும் 20 பேர்ச்சஸ் அளவில் அமைந்துள்ளதுமான சகல காணியும் கட்டடமும். இதனைச் சூழ்ந்துள்ள எல்லைகளாவன :—

வடக்கில் :—அதே காணியின் ஒரு பாகம். ஜி. டி. எம். அப்புஹாமி என்பவருக்கும் ஏனையவர்களுக்கும் உரிய காணி.

கிழக்கில் :—வெலிக்கடை-அத்துறுகிரிய பொது வீதி.

தெற்கில் :—மார்ட்டின் பெரேரா என்பவருக்கு உரிய காணி.

மேற்கில் :—அதே காணியின் ஒரு பாகம். டபிள்யூ. ஏ. பெரேரா என்பவருக்கும் ஏனையவர்களுக்கும் உரியதான காணி.

4-544

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.